**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093868

1. District மாவட்டம் : DVAC    PS: காவல்நிலையம் V&AC HQRS    Year: ஆண்டு 2019    FIR No.: மு.த.அ. எண் 10    Date: நாள் 04.04.2019

2. (i) Act சட்டம்: Cr. P.C    Sections பிரிவுகள்: 102

   (ii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018    Sections பிரிவுகள்: 7, 12

   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 01-11-2018    Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 1800 hrs.    Time to : நேரம் வரை 2100 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01-11.2018    Time நேரம் : 22.00 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.04.2019    Time நேரம் : 16.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    South 20 Kms.

   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி    Office of the District Environmental Engin[eer] Tamil Nadu Pollution Control Board, No. 77A, South Avenue Road, Ambattur Industrial Estate, Chennai - 600058.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. SUMATHI    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality நாட்டினம் Indian    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் District Inspection Cell officer    (g) Address : முகவரி Chennai Collectorate Chennai - 1.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   (1) Thiru K. PRAKASH, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, No. 77A, South Avenue Road, Ambattur Industrial Estate, Chennai - 58.

   (2) Thiru Iyyappan, M/A48, S/o. Somasundaram No. 5/7, Annadurai Stre[et] Gandhi Street, East Tambaram, Che[nnai]

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   To get Concurrence from the Competent Authority

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties ~~stolen~~ / involved : (i) Rs. 2,49,500/= Cash
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு (ii) Silver Tumbler (50.780gm

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR Content is enclosed in Separate sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed S. VALLINAYAGAM Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Informed to the Complainant

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Vallinayagam 04.04.2019
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

04.04.2019 at 16.30 hrs.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் (S. VALLINAYAGAM)
Rank: நிலை Inspector of Police No. எண்…………
Vigilance & Anti-corruption
Special Investigation Cell
Chennai-16

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.10/2019 சட்டப்பிரிவு 102 கு.வி.மு.ச. மற்றும் சட்டப்பிரிவு 7 மற்றும் 12 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு

சென்னை-58 அம்பத்தூர் தொழிற்பேட்டை, எண்.77ஏ தெற்கு அவின்யூ சாலையில் இயங்கி வரும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை தொடர்பாக திருமதி.பி.சுமதி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை அவர்கள் 01.11.2018ந் தேதியிட்ட அளித்த புகார் மனு தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய உயர் அதிகாரியிடம் ஒப்புதல் பெற புகார் மனுவின் நகல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்தறை இயக்குநரகம் மூலம் அனுப்பப்பட்டது. பின்னர் உரிய உயர் அதிகாரியின் ஒப்புதல் பெற்று இன்று 04.04.2019ந் தேதி மதியம் 15.00 மணிக்கு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. திருமதி.வே.சுமதி அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.வே.சுமதி,<br>மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர்,<br>சென்னை மாவட்டம்,<br>சென்னை-1 | கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு,<br>ஊழல் தடுப்பு மற்றும்<br>கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16. |

கடித எண். அ/739/18 நாள் 01.11.2018

அய்யா,

பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-58 அம்பத்தூர் தொழிற்பேட்டை, எண்.77ஏ தெற்கு அவின்யூ சாலையில் இயங்கி வரும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை நாள் 01.11.2018 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக.

----

சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழுமம் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 01.11.2018-ம் தேதி சென்னை-58 அம்பத்தூர் தொழிற்பேட்டை, எண்.77ஏ தெற்கு அவின்யூ, சாலையில் இயங்கி வரும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்தில் பணம் ரூ.2,49,500/- மற்றும் 50.780 கிராம் என்று குறிப்பிடப்பட்டிருந்த வெள்ளி டம்பளர் ஒன்றும் கைப்பற்றப்பட்டது. இந்த கூட்டுத் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மற்றும் பணம் ரூ.2,49,500/- மற்றும் 50.780 கிராம் என்று குறிப்பிடப்பட்டிருந்த வெள்ளி டம்பளர் ஒன்றும் இத்துடன் பெறப்பட்ட வாக்குமூலங்கள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது.

மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கைக்குரிய,

இணைப்பு- மேற்கண்டவாறு

மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,
சென்னை மாவட்டம்.

Madam, Received this complaint on 01.11.2018. Copy of this complaint was forwarded to the Competent Authority through Directorate of Vigilance & Anti-Corruption for getting concurrence u/s 17A of the Prevention of Corruption (Amendment) Act 2018. After getting concurrence from the Competent Authority, this day (04.04.2019) at 1500 hrs, I am registering a case in V&AC Hqrs. Crime No.10/2019 u/s 102 Cr.P.C. and Sections 7, 12 of Prevention of Corruption (Amendment) Act 2018 and taken up for investigation Sd/- (S.VALLINAYAGAM), Inspector of Police, V&AC, SIC 04.04.2019.

<u>இருதுறை கூட்டுத்தணிக்கை நடவடிக்கை குறிப்பு பின்வருமாறு :</u>

சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சிறப்பு புலனாய்வுக் குழு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர்கள் ஆகியோர் இணைந்து இன்று (01.11.2018) சென்னை-58 அம்பத்தூர் தொழிற்பேட்டை, எண்.77ஏ தெற்கு அவின்யூ சாலையில் இயங்கி வரும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை

| | |
|---|---|
| இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள் | 1. திருமதி.வே.சுமதி<br>மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,<br>சென்னை.<br><br>2. திரு.த.தங்கசாமி,<br>கூடுதல் காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை.<br><br>3. திரு.எம்.குமரகுருபரன்,<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை.<br><br>4. திரு.தி.கந்தசாமி,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை. |

| | |
|---|---|
| | 5. திரு.எஸ்.வள்ளிநாயகம்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை.<br><br>6. திருமதி.எஸ்.மலர்கொடி,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை.<br><br>7. திரு.கே.பிரகாஷ்,<br>மாவட்ட சுற்றுச்சுழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்<br>எண்.77ஏ தெற்கு அவின்யூ சாலை<br>அம்பத்தூர் தொழிற்பேட்டை<br>சென்னை.<br><br>8. திரு.சிஆர்.சதிஷ்குமார்,<br>உதவி சுற்றுச்சுழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்<br>எண்.77ஏ தெற்கு அவின்யூ சாலை<br>அம்பத்தூர் தொழிற்பேட்டை<br>சென்னை.<br>9. திரு.ரகுகுமார்,<br>உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்<br>எண்.77ஏ தெற்கு அவின்யூ சாலை<br>அம்பத்தூர் தொழிற்பேட்டை<br>சென்னை.<br><br>10. திரு.வீ.ரங்கசாமி<br>உதவி பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்<br>எண்.77ஏ தெற்கு அவின்யூ சாலை<br>அம்பத்தூர் தொழிற்பேட்டை<br>சென்னை. |

சென்னை-58 அம்பத்தூர் தொழிற்பேட்டை, எண்.77ஏ தெற்கு அவின்யூ சாலையில் இயங்கி வரும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரிய சான்றிதழ் கொடுப்பதற்கு தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் கையூட்டு பெற்றுக் கொண்டு சான்றிதழ்கள் வழங்கப்படுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, இன்று 01.11.2018-ம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.வே.சுமதி அவர்கள் சகிதம் மேற்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தில் கூட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. கூட்டு தணிக்கை மேற்கொண்டபோது மேற்படி அலுவலகத்தில் (1) திரு.கே.பிரகாஷ், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (2) திரு.சிஆர்.சதிஷ்குமார், உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், (3) திருமதி.ப.செல்வ இளவரசி, உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் (4) திரு.ரகுகுமார், உதவி பொறியாளர், (5) திரு.வீ.ரங்கசாமி உதவி பொறியாளர், (6) திருமதி.கு.இந்துமதி, சுருக்கெழுத்து தட்டச்சர், (7) திரு.க.ராஜா, உதவியாளர், (8) திரு.து.முனுசாமி, ஓட்டுநர் ஆகிய நிரந்தர அரசு அலுவலர்களும் மற்றும் தற்காலிக அலுவலர்களாக (1) திருமதி.எஸ்.துர்கா தேவி, கணிப்பொறி தட்டச்சர் (2) திரு.அய்யப்பன், ஓட்டுநர் ஆகியோர் பணியில் இருந்தனர். மேற்படி அலுவலர்களிடம் காவல் ஆய்வாளர் தன்னையும் மாவட்ட ஆய்வுக் குழு அலுவலரையும் அறிமுகம் செய்தார். மேற்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் இலக்க எண். எண்.77ஏ தெற்கு அவின்யூ சாலையில் அம்பத்தூர் தொழிற்பேட்டை சென்னை-58 என்ற முகவரியில் கிழக்கு மேற்காக செல்லும் அம்பத்தூர் எஸ்டேட் நெடுஞ்சாலையின் வடக்கு பக்கம் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. மேலும் மேற்படி அலுவலகம் அமைந்துள்ள கட்டிடம் மூன்று

தளங்களை கொண்டுள்ளது. தரைத்தளத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகமும் மற்றும் முதல் தளத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் அமைந்துள்ளது. மேலும் இரண்டாவது தளம் வெற்றிடமாக உள்ளது. கூட்டுத்தணிக்கை குழுவினர் இந்த அலுவலகத்திற்கு ஆய்விற்கு வந்த போது மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.பிரகாஷ் தனது அறையில் அமர்ந்திருந்தார். மேற்படி சுற்றுச்சூழல் பொறியாளரிடம் கூட்டுத்தணிக்கை குழுவினர் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். பின்னர் இந்த அலுவலகத்தில் கூட்டுத்தணிக்கை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் கூட்டுத்தணிக்கை குழுவினர் அலுவலக பணியாளர்களின் இருக்கைகள் சோதனை செய்யப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் வரவேற்பு பகுதிக்கு வலது பக்கத்தில் தெற்குப்பகுதியில் இருந்த கண்ணாடி அறையில் ஒரு நபர் அமர்ந்திருந்தார். அந்த அறையில் அமர்ந்திருந்த நபரை கூட்டுத்தணிக்கை குழுவினர் விசாரித்த போது தனது பெயர் சதிஷ்குமார் என்றும் உதவி சுற்றுச்சூழல் பொறியாளராக இந்த அலுவலகத்தில் பணியாற்றி வருவதாக தெரிவித்தார். மேலும் அவரது அறையில் சோதனை செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து வரவேற்பு பகுதியின் மேற்கே கிழக்கு நோக்கி காலியாக இருந்த இருக்கையை திரு.சதிஷ்குமார் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. இந்த இருக்கை தொடர்பாக திரு.சதிஷ்குமார் அவர்களிடம் விசாரித்த போது அந்த காலியாக இருந்த இருக்கையின் அருகில் வெள்ளை நிற சட்டையும மற்றும் சாம்பல் நிற பேண்ட் அணிந்த ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். மேற்படி தணிக்கை குழு சோதனை செய்து கொண்டிருந்த போது வரவேற்பு அறையின் வடக்கு பக்கம் நோக்கி விரைந்து சென்றார். சற்று நேரத்தில் திரும்பிய அந்த நபரை அழைத்து விசாரித்தபோது தனது பெயர் அய்யப்பன் என்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளரின் ஒப்பந்த வாகனத்தின் ஓட்டுநர் என்றும் தான் சிறுநீர் கழிக்க சென்று வந்ததாக தெரிவித்தார். மேலும் தணிக்கை குழுவினர் மேற்படி நபர் சென்ற பகுதிக்கு சென்று பார்த்த போது அங்கு இந்த அலுவலகத்தின் கழிப்பறைகள் காணப்பட்டது. தெற்கு பக்கம்

ஆண்கள் கழிப்பறையும் வடக்கே பெண்கள் கழிப்பறையும் காணப்பட்டது. ஆண்கள் கழிப்பறையில் உள்ளே சென்று தணிக்கை குழுவினர் திரு.சதிஷ்குமார் முன்னிலையில் சோதனை செய்த போது அங்கே காணப்பட்ட வெள்ளை நிற வாஷ் பேசினுக்கு மேலே இருந்த இரும்பு கீரில் கொண்ட சிறிய ஜன்னலின் பகுதியில் ரப்பர் பேண்ட் சுற்றப்பட்டு கொத்தாக பணம் காணப்பட்டது. மேற்படி பணத்தை திரு.சதிஷ்குமார் மற்றும் ஓட்டுநர் திரு.அய்யப்பன் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. அந்த பணத்தை எண்ணிப்பார்த்த போது ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் 125 எண்ணிக்கையும் ஆக மொத்தம் ரூ.62,500/- காணப்பட்டது. இது குறித்து ஓட்டுநர் அய்யப்பனிடம் கேட்டபோது தான் அந்த பணத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என தெரிவித்தார். இந்த பணம் மாவட்ட ஆய்வுக்கு குழு அலுவலரால் விசாரணைககாக கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலகத்தின் ஆவணம் வைத்திருந்த அறை சோதனை செய்யப்பட்டது. இந்த அறைக்கு எதிர்புறம் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் திரு.ராஜா, உதவியாளராக பணி புரிவதாக தெரிவித்தார். அவரது இருக்கை சோதனை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவரது இருக்கைக்கு கிழக்கு பக்கம் மேற்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் திருமதி.துர்காதேவி என்றும் தான் கணினி தட்டச்சராக பணிபுரிவதாகவும் தெரிவித்தார். அவரது இருக்கை சோதனை செய்யப்பட்டது. அவரது இருக்கைக்கு கிழக்கே வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் திருமதி.இந்துமதி என்றும் தான் சுருக்கெழுத்தராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரது இருக்கையும் சோதனை செய்யப்பட்டது. பின்னர் அலுவலகத்தின் கிழக்கு பகுதியில் காணப்பட்ட அறை சோதனை செய்யப்பட்டது. அந்த அறையில் பழைய பொருட்கள் காணப்பட்டது. பின்னர் அலுவலகத்தின் தெற்கு பகுதியில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் க.ரகுகுமார் என்றும், தான் உதவிப் பொறியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். பின்னர் அவருக்கு தெற்கே வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை

விசாரித்த போது தனது பெயர் வீ.ரங்கசாமி என்றும் தான் உதவிப் பொறியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். இருவரது இருக்கைகளும் சோதனை செய்யப்பட்டன. மேலும் இந்த அலுவலகத்தின் வரவேற்பு பகுதியில் அமர்ந்திருந்த நபர்களை விசாரித்த போது தங்களது நிறுவனத்தின் சார்பாக சுற்றுச்சூழல் சான்றிதழ் பெறுவதற்கு வந்திருப்பதாக தெரிவித்தார்கள். அவர்களது விவரங்கள் பின்வருமாறு

| Sl.No | Name and details | Company details | Material Details | Amount Found in their possession |
|---|---|---|---|---|
| 1 | Ezhilan<br>S/o. Siva Chithabaram<br>No.156, North Street, Meensurthi,<br>Ariyalur-612 903. | M/s.Harish Metal Finishers,<br>No.47, Brahmin Street, Pattaravakkam,<br>Chennai 89 | Fees application for CTO-Direct covering letter.<br>Copy-1 | Rs.870/- |
| 2 | Samsundar<br>S/o.Chandran<br>No.34B, Kaliamman Kovil Street,<br>Virugambakkam,<br>Chennai-92 | M/s.Nihaa Surfastitrs<br>No.32, SIDCO Industrial Estate,<br>Ambattur,<br>Chennai-98 | Order copy of Directions for the Closure and Stoppage of Power Supply order From Board Office | Rs.510/- |
| 3 | A.Magesh<br>S/o.V.Anandan<br>No.6/12, Arundhathi Colony,<br>Mittai Kandigai,<br>Nalladhur,<br>Tiruvallure-631 212 | M/s.Pop Factory Foods India Pvt Ltd,<br>No:90/50,<br>Choolai High Road,<br>Chennai-600 112 | Application for Consent to Establish –New ( CTE) | Rs.600/- |
| 4 | Dhileepan<br>S/o.T.Murugasan<br>No.1B, Vedamman Avenue,<br>Ist Floor, Subbarayan Nagar,<br>4th Street,<br>Kodambakkam | M/s.Pop Factory Foods India Pvt Ltd,<br>No:90/50,<br>Choolai High Road,<br>Chennai-600 112 | Application for Consent to Establish –New ( CTE) | Rs.70/- |
| 5 | Karthigayan<br>S/o.Venkatesan<br>No.166, SIDCO Tiny Sector,<br>Ambattur Industrial Estate,<br>Chennai-98 | M/s.T.K.Engineering Works,<br>No.166, SIDCO Tiny Sector,<br>Ambattur Industrial Estate, Ambattur,<br>Chennai-98 | Application for Consent to Establish –New ( CTE) | Rs.1010/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | Saptagiri<br>S/o.Somasundaram<br>No.182, SIDCO Tiny Sector,<br>Ambattur Industrial Estate,<br>Chennai-98 | M/s.T.K.Engineering Works,<br>No.166, SIDCO Tiny Sector,<br>Ambattur Industrial Estate, Ambattur,<br>Chennai-98 | Application for Consent to Establish –New ( CTE) | Rs.540/- |
| 7 | Pushparaj<br>S/o.T.Govindan<br>G.K Metals<br>F.95, SIPCOT Industrial Estate,<br>Gummdipoondi | M/s.Kamatchi Metals,<br>#Old No.19, #New No.36-A, North Phase,<br>SIDCO Industrial Estate,<br>Ambattur<br>Chennai -98 | | Rs.3000/- |
| 8 | Thiruvengada Krishnan<br>S/o.J Vijayaraghavan<br>No.97, Bhanu Nagar,<br>III Avenue,<br>Pudur,Ambattur | M/s.Kamatchi Metals,<br>#Old No.19, #New No.36-A, North Phase,<br>SIDCO Industrial Estate,<br>Ambattur<br>Chennai -98 | | Rs.1190/- |
| 9 | Anishrehan<br>S/o.Narendar Nihan<br>No.123, TTK Road,<br>Alwarpet,<br>Chennai 18 | M/s.Best Metal Alloys<br>Plot No:188, (NP)<br>Ambattur Industrial Estate,<br>Ambattur,<br>Chennai-98 | Application for Consent to Establish –New ( CTE) | Rs.2000/- |
| 10 | Meenakshi Sundaram<br>S/o.MathuriBoobasiwaran<br>No.18H, Maya Street,<br>Boombukar Nagar,<br>Ambattur<br>Chennai 53 | M/s.Finishwel Industries<br>No.193, Tiny Sector,<br>SIDCO Industrial Estate,<br>Ambattur,<br>Chennai-98 | Reply for Show case notice covering letter | Rs.3580/- |
| 11 | 1)V.Sriram<br>S/o.W.A.Kapali<br>No.455,465,<br>SIDCO Industrial Estate,<br>Ambattur<br>Chennai<br>2)Vigneswaran<br>S/o.R.Mohanavelu | M/s.Aswin Cold Forge Pvt Ltd<br>No.455,465,<br>SIDCO Industrial Estate,<br>Ambattur<br>Chennai-98 | Power restoration | Rs.1500/- |
| 12 | Sunderasan<br>S/o.N.Subramanya Iyar<br>New No.173 (Old No.242)<br>SIDCO Industrial Estate,<br>Ambattur<br>Chennai 98 | M/s.Rubbermach Industries,<br>New No.173 (Old No.242)<br>SIDCO Industrial Estate,<br>Ambattur<br>Chennai 98 | 1)Fees application for CTO-Direct covering letter. | Rs.1500/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | S.Sunder Raj<br>S/o.V.Sammantham<br>No.40/4, Bolunayakan Street,<br>Puliyanthopi,<br>Chennai-600 012 | M/s.Kamatchi Metals, #Old No.19, #New No.36-A, North Phase, SIDCO Industrial Estate,<br>Ambattur<br>Chennai -98 | New Application for restoring Electric City | |
| 14 | V.Kamalahasan<br>S/o.N.Vaithinathan<br>No.41/113, Pillariyaar Kovil Street,<br>Kanchinakuppam,<br>Ambattur,<br>Chennai 98 | M/s.Ambattur Induction,<br>S.F.No.98/1,<br>Ambattur Village,<br>Ambattur Taluk,<br>Chennai-98 | Order copy of Consent to Operate-Direct | |
| 15 | Veerapandi<br>S/o.T.M.Elumalai,<br>D4, T2 Estate Police Quarters,<br>Ambattur Industrial Estate,<br>Ambattur,<br>Chennai | M/s.Specfin Industries No.563/A, MTH Road, Ambattur<br>Chennai 98 | Renewal of consent order copy | |

மேற்படி அட்டவணையில் வரிசை எண் 1 முதல் 15 வரை உள்ள நபர்களை விசாரித்த போது தங்களது கம்பேனி தொடர்பாக அம்பத்தூர் மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலத்தில் நிலுவையில் உள்ள பல்வேறு பணிகளுக்காக இந்த அலுவலகம் வந்ததாக கூறினர். அதற்கான ஆவணங்களையும் காண்பித்தனர். மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வரிசை எண் 1 முதல் 15 வரை உள்ள நபர்கள் வைத்திருந்த பணம் குறித்து கேட்க தங்களிடம் இருந்த பணத்தை ஆஜர் செய்தார்கள். அந்த பணம் அட்டவணையில் குறிப்பிட்டப்பட்டுள்ளது. 1 முதல் 12 வரை உள்ளவர்களின் பணம் குறித்து தனித்தனியே கேட்டதற்கு தங்களது சொந்த பணம் என்றும் கை செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்தனர். இந்த விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு பணத்தை அவர்களிடமே திருப்பி அளிக்கப்பட்டது. பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்த மேலே அட்டவணையில் வரிசை எண்.13ல் குறிப்பிட்ட நபரை விசாரித்த போது தனது பெயர் சுந்தராஜ் என்றும் வடக்கு Phase சிட்கோ தொழிற்பேட்டை எண்.19/36 என்ற

முகவரியில் காமாட்சி மெட்டல்ஸ் என்ற கம்பெனியை நடத்தி வருவதாகவும் அது தற்போது அந்த கம்பெனி மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் நடவடிக்கையின் காரணமாக இயங்கவில்லை என்றும் மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் ஆய்வின் காரணமாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே மீண்டும் மின் இணைப்பை பெறுவதற்கு அதற்குரிய ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றை இந்த அலுவலகத்தில் சமர்ப்பிப்பதற்காக வந்ததாக கூறினார். மேலும் அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க தனது பேண்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து 100 ரூபாய் நோட்டுக்கள் 20 எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து கேட்ட போது தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடமே கொடுக்கப்பட்டது. மேலும் அவர் தனது இடது பக்க பாக்கெட்டிலிருந்து ஐநூறு நோட்டுகள் 280 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.1,40,000/- எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணம் குறித்து கேட்ட போது அந்த பணம் குறித்து சரியான விளக்கம் அளிக்காமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்த மேலே அட்டவணையில் வரிசை எண்.14ல் குறிப்பிட்ட நபரை விசாரித்த போது தனது பெயர் கமலஹாசன் என்றும் தான் சென்னை அம்பத்தூர் கச்சினாகுப்பம் எண்.41/1பி பிள்ளையார் கோவில் தெருவில் அம்பத்தூர் இன்டெக்சன் என்ற கம்பெனியை நடத்தி வருவதாகவும் அது தற்போது அந்த கம்பெனி மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் நடவடிக்கையின் காரணமாக இயங்கவில்லை என்றும் மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் ஆய்வின் காரணமாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே மீண்டும் மின் இணைப்பை பெறுவதற்கு அதற்குரிய ஆவணங்களை இந்த அலுவலகத்தில் சமர்ப்பிப்பதற்காக வந்ததாக கூறினார். மேலும் அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க தனது பேண்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து 100 ரூபாய் நோட்டுக்கள் 12 மற்றும் பத்து ரூபாய் நோட்டுக்கள் 5 ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து கேட்ட போது தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக

தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடமே கொடுக்கப்பட்டது. மேலும் அவர் தனது இடது பக்க பாக்கெட்டிலிருந்து இரண்டாயிரம் நோட்டுகள் 11 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.22,000/- எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணம் குறித்து கேட்ட போது அந்த பணம் குறித்து சரியான விளக்கம் அளிக்காமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்த மேலே அட்டவணையில் வரிசை எண்.13ல் குறிப்பிட்ட நபரை விசாரித்த போது தனது பெயர் வீரபாண்டியன் என்றும் தான் சென்னை அம்பத்தூர் எம்டிஎச் சாலை எண்.563/ஏ என்ற முகவரியில் Specfin Industries Metal Finishers & Consultants என்ற கம்பெனியை நடத்தி வருவதாகவும் அந்த கம்பெனியின் மாசுகட்டுப்பாடு வாரிய லைசென்ஸ் புதுப்பித்தல் மற்றும் தற்போது அந்த கம்பெனி மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் நடவடிக்கையின் காரணமாக இயங்கவில்லை என்றும் மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் ஆய்வின் காரணமாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே மீண்டும் மின் இணைப்பை பெறுவதற்கு அதற்குரிய ஆவணங்களை இந்த அலுவலகத்தில் சமர்ப்பிப்பதற்காக வந்ததாக கூறினார். மேலும் அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க தனது பேண்டின் இடது பக்க பாக்கெட்டிலிருந்து 100 ரூபாய் நோட்டுக்கள் 8 மற்றும் பத்து ரூபாய் நோட்டுக்கள் 6 மற்றும் சில்லறை காசுகள் ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து கேட்ட போது தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடமே கொடுக்கப்பட்டது. மேலும் அவர் தனது வலது பக்க பாக்கெட்டிலிருந்து ஐநூறு நோட்டுகள் 50 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.25,000/- எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணம் குறித்து கேட்ட போது அந்த பணம் குறித்து சரியான விளக்கம் அளிக்காததால் மேற்படி பணம் விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.2,49,500/- ஆகும். மேலும் சோதனையின் போது இவ்வலுவலகத்தின் செக்யூரிட்டி பணியிலிருந்த திரு.பாலமுருகன் என்பவர் கையில் ஒரு பரிசு பொருள் வைத்திருந்தார். அந்த பரிசுப் பொருளின் அட்டையில் நந்தின்

கோல்ட் ஹவுஸ் முகப்பேரு சென்னை என்று அச்சிடப்பட்டு இருந்ததை சோதனை செய்த போது அதில் 50.780 கிராம் என்று குறிப்பிடப்பட்டிருந்த வெள்ளி டம்பளர் ஒன்று இருந்தது. அது குறித்து கேட்டபோது இவ்வலுவலகத்தின் மாவட்ட சுற்றுசுழல் பொறியாளராக பணியாற்றும் திரு.பிரகாஸ் என்பவரின் தனிப்பட்ட ஓட்டுனர் திரு.ஐயப்பன் இன்று மாலையில் தன்னிடம் கொடுத்து பாதுகாப்பாக வைத்திருக்கும்படியும் வீட்டிற்கு போகும்போது பெற்றுக் கொள்வதாகவும் கூறினார். இந்த வெள்ளி டம்மளர் குறித்து மேற்படி ஐயப்பனிடம் கேட்ட போது அவர் சரியான விளக்கம் அளிக்கவில்லை. இந்த டம்ளரை விலைக்கு வாங்கியதற்கான எந்த ஆதாரத்தையும் அளிக்கவில்லை. எனவே இந்த வெள்ளி டம்ளர் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த இரு துறை கூட்டுத் தணிக்கை இன்று (01.11.2018) இரவு 9.00 மணியளவில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலகத்தின் அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ அலுவலக ஊழியர்களுக்கோ உடமைகளுக்கோ எவ்வித இடையூறோ சேதாரமோ இல்லாமல் மேற்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/- (வே.சுமதி)
மாவட்ட ஆய்வுக் குழு
அலுவலர்,
சென்னை மாவட்டம்

ஒப்பம்/- திரு.த.தங்கசாமி,
கூடுதல் காவல் துணை
கண்காணிப்பாளர்,
சிறப்பு புலனாய்வு குழு,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை, சென்னை.

ஒப்பம்/-திரு.எம்.குமரகுருபரன்,
காவல் துணை
கண்காணிப்பாளர்,
சிறப்பு புலனாய்வு குழு,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை,
சென்னை.

ஒப்பம்/- திரு.தி.கந்தசாமி,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு குழு,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை,
சென்னை.

ஒப்பம்/-திரு.எஸ்.வள்ளிநாயகம்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு குழு,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை, சென்னை.

ஒப்பம்/-திருமதி மலர்க்கொடி,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு குழு,
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புத்துறை,
சென்னை.

ஒப்பம்/- திரு.கே.பிரகாஷ்,
மாவட்ட சுற்றுச்சூழல்
பொறியாளர்

ஒப்பம்/-திரு.சிஆர்.சதிஷ்குமார்,
உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்

ஒப்பம்/- திரு.ரகுகுமார்,
உதவி பொறியாளர்,

ஒப்பம்/- திரு.வீ.ரங்கசாமி
உதவி பொறியாளர்